RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை மலர்-5 இதழ்- 215 ஆகஸ்டு.10 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# “மக்களின் பாதுகாப்புக்காக இந்தியா எந்த எல்லைக்கும் செல்லும்”: ராஜ்நாத் சிங்

புதுடெல்லி: ஆக,10-

தனது மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய இந்தியா எந்த எல்லைக்கும் செல்லும் என்றும், ஆபரேஷன் சிந்தூர் மூலம் இது உலகுக்குக் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

டெல்லி கண்டோன்மென்ட்டில் உள்ள ராணுவ மருத்துவமனையில் நடைபெற்ற 'சிந்தூர் மகாரக்ததான் யாத்ரா' என்ற ரத்த தான முகாமில் உரையாற்றிய ராஜ்நாத் சிங், “இந்த மாபெரும் ரத்த தான முகாம் கருணையைப் பிரதிபலிக்கிறது. இந்த முகாமில் பங்கேற்ற ரத்தக் கொடையாளர்களில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த சுமார் 1,000 மல்யுத்த வீரர்களும் தடகள வீரர்களும் அடங்குவர். இது தன்னலமற்ற சேவையின் உணர்வையும் பாதுகாப்புப் படைகள் மீதான அவர்களது மதிப்பையும் வெளிப்படுத்துகிறது.



நன்கொடையாளர்களுக்கு நன்றி. இன்று தானமாக வழங்கப்பட்ட ரத்தம், எதிர்காலத்தில் தேவைப்படும் வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உதவும் வகையில் அமையும். ரத்தத்தை மனித உடலால் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும் என்பதாலும் அதை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு தானமாக வழங்க முடியும் என்பதாலும், ரத்த தானம் என்பது தர்மத்தின் உன்னதமான வடிவங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. ரத்த தானத்தை ஒரு கலாச்சாரமாக மக்கள் குறிப்பாக இளைஞர்கள் மாற்ற வேண்டும்.

2047ல் நமது சுதந்திரத்தின் 100வது ஆண்டு விழாவைக் கொண்டாடும்போது, நமது நோக்கம் ஒரு வளர்ந்த பொருளாதாரம் என்பதுடன் மட்டும் நின்றுவிடக்கூடாது. மக்கள் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் இருக்க வேண்டும்.

உடற்தகுதிக்கு இளைஞர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டும். ஆரோக்கியமாகவும் உடற்தகுதியுடனும் இருக்கும் ஒரு தனிநபர், சமூகத்திற்கு ஒரு பெரும் சொத்தாகத் திகழ்வதோடு, ரத்த தானம் போன்ற உன்னதமான பணிகளை மேற்கொள்வதற்கும் சிறந்த தகுதி பெற்றவராக இருப்பார்.

நமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதோடு, நமது பெண்கள் அணியும் குங்குமத்தையும் பாதுகாக்க இந்தியா எந்த எல்லைக்கும் செல்லும் என்ற உலகளாவிய செய்தியை ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா கூறியுள்ளது. நமது பாதுகாப்புப் படைகளின் இணையற்ற வீரத்தை 'ஆபரேஷன் சிந்தூர்' நிரூபித்துள்ளது.

பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகளையும் அவர்களின் வழிகாட்டிகளையும் ஒழித்ததற்காகவும், இந்தியா மீது தீய எண்ணம் கொண்டவர்கள், கடுமையான விளைவுகளைச் சந்திப்பதை உறுதி செய்ததற்காகவும் நமது பாதுகாப்புப் படைகளை பாராட்டுகிறேன்.” என தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் மகாராஷ்டிர துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, ஆயுஷ் துறை இணையமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ், மகாராஷ்டிர அரசின் தொழில்துறை அமைச்சர் உதய் ரவீந்திர சமந்த், ராணுவத் தலைமைத் தளபதி ஜெனரல் தீரஜ் சேத், ஆயுதப் படைகளின் மருத்துவ சேவைகள் தலைமை இயக்குநர் வைஸ் அட்மிரல் ஆர்த்தி சரின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# “தமிழக ரயில்வே கட்டமைப்பை மேம்படுத்த துணை நிற்க வேண்டும்”

## விஜய்க்கு நயினார் வேண்டுகோள்

சென்னை, ஆக.10-

கண்மூடித்தனமான மோதல் போக்கை கடைப்பிடிக்காமல் தமிழகத்தின் ரயில்வே உட்கட்டமைப்பை மேம்படுத்த மத்திய அரசுக்கு துணை நிற்க வேண்டும் என முதல்வர் விஜய்க்கு பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.






இதுகுறித்து தனது எக்ஸ் தள பதிவில் அவர் கூறியிருப்பதாவது: தமிழகத்தின் ரயில்வே திட்டங்கள் மற்றும் தமிழக ரயில்வே துறைக்கு மத்திய அரசு இதுவரை ஒதுக்கிய நிதி உள்ளிட்டவை தொடர்பாக திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா எழுப்பிய கேள்விகளுக்கு மத்திய ரயில்வே அமைச்சர் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்துள்ளார்.

அதில், காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சிக் காலத்தில் தமிழகத்தின் ரயில்வே துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் காட்டிலும் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் தமிழகத்துக்கு 8 மடங்கு அதிக நிதி வாரி வழங்கப்பட்டுள்ளது என்பதை மத்திய அரசு அழுத்தம் திருத்தமாக மீண்டும் ஒருமுறை எடுத்துக் கூறியுள்ளது.

மொத்தம் 19 புதிய ரயில்வே திட்டங்கள், கிட்டத்தட்ட 500 கிமீ வரையிலான புதிய ரயில் பாதைகள் உள்ளிட்ட பல வளர்ச்சித் திட்டங்கள் தமிழகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமன்றி, மத்திய அரசின் மேலும் புதிய திட்டங்களுக்கு மொத்தம் 4,612 ஹெக்டேர் நிலங்கள் தேவைப்படும் நிலையில், முந்தைய திமுக அரசு அதில் வெறும் 26 சதவீதம் அதாவது 1,178 ஹெக்டேர் நிலங்களை மட்டுமே கையகப்படுத்திக் கொடுத்துள்ளதையும் நமது மத்திய அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, முந்தைய அரசைப் போல கண்மூடித்தனமான மோதல் போக்கை கடைபிடிக்காமல், ரயில்வே திட்டங்களுக்கு தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகளை துரிதப்படுத்தி, தமிழகத்தின் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதில் மத்திய அரசுக்கு துணை நிற்குமாறு முதல்வர் விஜய்யை கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தொகுதி மறுவரையறை: தி.மு.க., வெளிநடப்பு செய்தால் தமிழகத்திற்கு மட்டுமல்ல இந்தியாவுக்கே துரோகம்; அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை, ஆக.10-

தொகுதி மறுவரையறை விவகாரத்தில், திமுக நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்ய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது; அப்படி செய்தால் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே துரோகம் என அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்தார்.




மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தில் ‘LETS CLEAN MADURAI’ என்ற பெயரில் நடைபெற்ற மாரத்தான் போட்டியை மின்சாரத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தவெக சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

மாரத்தான் போட் டியை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர் களிடம் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், மதுரையை குப்பையில்லா நகரமாக மாற்றும் நோக்கில் இந்த மாரத்தான் போட்டி நடத்தப்படுகிறது என்றார்.

அவர், “தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தற்போது எந்த அவசரத் தேவையும் இல்லை. அரசியல் காரணங்களுக்காகவே ஒன்றிய அரசு தொகுதி மறுவரையறை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிகிறது.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் ஒரு நிமிடம் பேசுவதற்குக்கூட நேரம் கிடைக்காத சூழல் உள்ளது. இந்நிலையில், மக்கள் தொகையை அடிப்படையாக கொண்டு தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட்டால், தமிழகத்தின் நாடாளுமன்றத் தொகுதிகளின் அபாயம் உள்ளது.

இந்த காலகட்டத்தில் அவசியமின்றி தொகுதி மறுவரையறை கொண்டு வரப்படுவது ஏற்றுக் கொள்ள முடியாதது. தமிழகத்திற்கு தற்போதுள்ள 39 நாடாளுமன்றத் தொகுதிகளும் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தையும் ஒதுக்கும் நிலை ஏற்படக்கூடும். எனவே, தொகுதி மறுவரையறை தொடர்பான எந்த நடவடிக்கையையும் அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து எதிர்த்து இந்த விவகாரத்தை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது” என தெரிவித்தார்.

திமுக வெளிநடப்பு செய்யப் போகிறதா?

மேலும், “திமுக ஏற்கனவே பாஜகவுடன் கைகோர்த்து, தொகுதி மறுவரையறை தொடர்பான மசோதா கொண்டு வரப்படும் போது ஆதரவாக செயல்படுவ தாகவும், நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்ய உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகின்றன. இந்த தகவல் உண்மையா என்பதை திமுக தெளிவுபடுத்த வேண்டும்.

ஏப்ரல் மாதம் அனைத்து கட்சிகளும் இணைந்து தொகுதி மறுவரையறை தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றியிருந்தனர். அந்த தீர்மானத்தின் அடிப்படையில் திமுக முழுமையாக எதிர்ப்பு தெரிவித்து, நாடாளுமன்றத்தில் மசோதாவுக்கு எதிராக வாக்களிக்க வேண்டும்.

மாறாக, மசோதா நேரத்தில் திமுக நாடாளுமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்யும் என்ற தகவல் உண்மையானதாக இருந்தால், அது தமிழகத்திற்கு மட்டுமல்ல; ஒட்டுமொத்த இந்தியாவிற்கும் திமுக செய்யும் மிகப்பெரிய துரோகமாக இருக்கும்.

ஆட்சியில் இருந்தபோது எடுக்கப்பட்ட முடிவுகளுக்கும், தற்போது ஆட்சியில் இல்லாத நிலையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் இடையே முரண்பாடு இருக்கக்கூடாது. திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஒட்டுமொத்த தமிழக நலனையும் பாஜகவிடம் அடகு வைக்க முயற்சிக்கிறார்.

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் தமிழகத்தின் நலனைப் பாதுகாக்க அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்” என அமைச்சர் நிர்மல் குமார்

# பள்ளி காலை உணவுத் திட்டத்தில் கடலை மிட்டாய்; உற்பத்தியாளர்கள் சங்கம் கோரிக்கை!

தூத்துக்குடி, ஆக.10-

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் தயாரிக்கப்படும் புகழ்பெற்ற கடலை மிட்டாய்களைப் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்று உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. கரிசல் மண் பூமியில் விளையும் நிலக்கடலைகளைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த மிட்டாய்கள் உலக அளவில் பெயர் பெற்றதுடன், கடந்த 2020ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30ந் தேதி புவிசார் குறியீடும் பெற்றுள்ளது. இப்பகுதியில் சுமார் 120 இடங்களில் குடிசைத் தொழிலாக நடைபெற்று வரும் இந்தத் தயாரிப்புகள் சிங்கப்பூர், மலேசியா மற்றும் லண்டன் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

மாணவர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில் அரசால் செயல்படுத்தப்படும் காலை உணவுத் திட்டத்தில் இந்தச் சத்தான கடலை மிட்டாய்களை வழங்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று உற்பத்தியாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் இந்தத் தின்பண்டங்கள் சிறுவர்களின் எலும்பு மற்றும் உடல் வலிமைக்குப் பெரிதும் உதவுவதுடன், ஊட்டச்சத்து குறைபாடுகளையும் முழுமையாகப் போக்க வழிவகை செய்யும். இதனால் ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பள்ளி மாணவர்கள் ஊட்டச்சத்து மிக்க உணவுகளைப் பெற்றுத் தங்களின் கல்வி மற்றும் விளையாட்டுகளில் முழு ஈடுபாட்டுடன் செயல்பட முடியும்.

இந்தக் கோரிக்கையை ஏற்று அரசுப் பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவுத் திட்டத்தில் கோவில்பட்டி கடலை மிட்டாயை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இதன் மூலம் உள்ளூர் தொழிலாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதுடன், பாரம்பரிய உணவு வகைகளின் பயன்பாடும் இளைய தலைமுறையிடம் ஊக்கப்படுத்தப்படும்

# ‘GenZ’ இளைஞர்களை சிலர் தவறாக வழிநடத்த முயற்சி; பதவி விலகியது ஏன்? தர்மேந்திர பிரதான் விளக்கம்

டெல்லி, ஆக.10-

டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்ற போராட்டங்களுக்கு மத்தியில் மத்திய கல்வித்துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து இரண்டு வாரங்கள் ஆகும் நிலையில், ஒடிஷா மாநிலம், சம்பல்பூரில் உள்ள கங்காதர் மெஹர் பல்கலைக்கழகத்தில் (ஆக.08) அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் முதன்முறையாக பங்கேற்றிருந்த பாஜகவின் மூத்த தலைவர் தர்மேந்திர பிரதான், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது, தனது மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி ராஜினாமா குறித்து முதன்முறையாக மனம் திறந்து பேசினார்.

அதாவது, "நீட் போராட்டங்களின்போது நம்முடைய 'GenZ' இளைஞர்களை சிலர் தவறாக வழிநடத்த முயன்றனர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 2 கோடி குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்களுக்கு பல லட்சியங்கள் உள்ளன. அவர்கள் உலகிற்கே வழிகாட்டியாக மாறுவார்கள். பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பதவி விலகத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தேன். அதன்பின், ஜூலை 25ஆம் தேதி பதவியை ராஜினாமா செய்தேன்" என்று தெரிவித்தார்.

ரைராகோலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற தர்மேந்திர பிரதான், ஒடிஷாவின் முன்னாள் முதலமைச்சரும், பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவருமான நவீன் பட்நாயக் மீது பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். "பிஜு ஜனதா தளம் கட்சியின் தொண்டர்களாலும், தன்னைத் திரும்பி செல்லுமாறு எழுப்பப்பட்ட முழக்கங்களாலும் தான் சற்றும் கலங்கவில்லை" என்று பிரதான் குறிப்பிட்டார்.

"நான் ஒடிஷா மக்களுக்கு அவப்பெயர் என்றும், ஒரு மோசமான நபர் என்றும்" நவீன் பாபு கூறுகிறார் என்ற தர்மேந்திர பிரதான், "ஒடிஷா மக்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் எப்போதாவது ஏதாவது செய்திருக்கிறேனா?" என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு பாஜக தொண்டர்கள் "இல்லை, இல்லை..." என்று முழக்கமிட்டனர். மேலும், தனக்கு எதிரான போராட்டங்களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதாக பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவரை குற்றம்சாட்டினார்.

"நான் மாநிலத்திற்கு பெருமை சேர்க்கும் சாதனைகளை செய்யாமல் இருக்கலாம். ஆனால் எனது செயல்பாடுகள் மாநிலத்திற்கு ஒருபோதும் அவப்பெயரை ஏற்படுத்தியதில்லை. மாநிலத்தின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் எந்தவொரு செயலையும் ஒருபோதும் நான் செய்யமாட்டேன்; ஜகந்நாதர் மற்றும் சம்பல்பூரின் காவல் தெய்வமான சமலேஸ்வரி ஆகியோரின் ஆசியுடன் 12 ஆண்டுகளுக்கு முன்பு தான் மத்திய அமைச்சரானேன்" என்று பிரதான் தெரிவித்தார்.

பிஜு ஜனதா தளம் எம்எல்ஏவும், சட்டப்பேரவையின் எதிர்க்கட்சி துணைத் தலைவருமான பிரசன்ன ஆச்சார்யா கலந்து கொண்ட நிகழ்ச்சி மேடையிலேயே பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவருக்கு எதிரான கருத்துகளை பிரதான் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சுக்கு சம்பல்பூரின் பிஜு ஜனதா தளம் கட்சியின் மாவட்டத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரோஹித் புஜாரி பதிலடி கொடுத்துள்ளார்.

ரோஹித் புஜாரி கூறியதாவது, "முன்னாள் முதலமைச்சர் நவீன் பட்நாயக் ஏன் தர்மேந்திர பிரதானுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும்? பிரதானால் 21 மாணவர்கள் தற்கொலை செய்துக் கொண்டனர் என்பது நாடு முழுவதும் தெரிந்த விஷயம். தேர்வில் பங்கேற்ற 22 லட்சம் மாணவர்களில், சுமார் 21 லட்சம் மாணவ, மாணவிகள் மன அழுத்தத்திற்கு ஆளாகியிருக்கக்கூடும். யாரும் அவருக்கு அவப்பெயரை ஏற்படுத்தவில்லை; அவரே தனக்கு அவப்பெயரை ஏற்படுத்திக் கொண்டார்" என்று கூறினார்.

# “மேகமலை, வருசநாடு வன கிராம மக்களை வெளியேற்றும் முடிவை கைவிட வேண்டும்”; சீமான்

தேனி, ஆக.10–

‘தேனி மாவட்டம் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும்’ என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டத்துக்கு ட்பட்டதும்மக்குண்டு, மேகமலை உள்ளிட்ட 98 மலை கிராமங்களில் பல தலைமுறைகளாக வசித்து வரும் 5,000க்கும் அதிகமான மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்ற முயல்வது மிகுந்த வேதனை அளிக்கிறது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ்ப் பழங்குடி மக்கள் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம பகுதியில் உள்ள நிலங்களில் இலவம், முந்திரி, மிளகு, ஏலம் உள்ளிட்ட பயிர்களை விளைவித்து வருகின்றனர்.

வன உயிரினங்கள் பெருமளவு அழிந்துவிட்ட தற்காலச் சூழலில் இயற்கை சமநிலையைப் பேணுவதில், மனிதர்களால் வளர்க்கப்படும் கால்நடைகள் பெருமளவு பங்கு வகிக்கிறது என்பதே எதார்த்த உண்மையாகும்.

மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள் காலங்காலமாக மலைகளுக்கும், காடுகளுக்கும் அவற்றில் வாழும் உயிரினங்களுக்கும் பாதுகாவலனாய் வாழ்ந்து வருகின்றனர். பன்மடங்கு அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ள நவீன உலகத்தின் அத்தனை வசதி வாய்ப்புகளையும் புறக்கணித்துவிட்டு, இன்றளவும் இயற்கையோடு இயற்கையாக வாழ்கின்ற அப் பெருங்குடி மக்கள் போற்றுதலுக் குரியவர்கள்.

அவர்களின் வாழ்வா தாரம் முழுக்க முழுக்கக் காடுகளையும்,



மலைகளையும் சார்ந்தே இருப்பினும், இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் அவர்களின் செயல்பாடுகள் ஒருபோதும் இயற்கையை அழிப்பதாகவோ, சிதைப்பதாகவோ இருந்ததில்லை.

அந்த அளவுக்கு இயற்கையோடு இயைந்த வாழ்வியலை மலைவாழ் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அம்மக்களை வெளியேற்ற வழிவகுக்கும் தீர்ப்பானது இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமே தவிர எவ்வகையிலும் பாதுகாப்பதாய் அமையாது.

உண்மையில் அரசு மற்றும் தனியார் பெருமுதலாளிகள் வணிக நோக்குடன் அமைக்கும் தொழிற்சாலைகள், தொலைத்தொடர்பு கம்பிவடம் பதித்தல், மின் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்கள், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்டவற்றால் மட்டுமே மலைகளும், காடுகளும், நீர்நிலைகளும் அவற்றை நம்பி வாழும் வன உயிரினங்களும் பேரழிவைச் சந்தித்து வருகின்றன. அவற்றை யெல்லாம் அனுமதித்துவிட்டு, பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களையும், மலைவாழ் மக்களையும் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்துவது, தனியார் முதலாளிகள் அந்நிலங்களை ஆக்கிரமித்து இயற்கையை மென்மேலும் சீரழிக்கவே வழிவகுக்கும்.

அதுமட்டுமின்றி, மலைக்காடுகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற உண்மையான அக்கறை இருக்குமாயின், ஒவ்வொரு நாளும் காடுகளில் முறைகேடாக மரங்கள் வெட்டப்பட்டு டன் கணக்கில் கடத்தப்படுவதையும், சொகுசு விடுதிகள், அடுக்குமாடி கட்டிடங்கள், தண்டவாளங்கள், சாலைகள், தொழிற்சாலைகள், தொலைத்தொடர்பு கருவிகள், அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவை அமைப்பதற்காக, வன விலங்குகளின் வாழ்விடங்களும், வழித்தடங்களும் சுருக்கப்படுவதையும் தடுத்து நிறுத்த தீவிர நடவடிக்கை எடுப்பதே சரியானதாக இருக்கும்.

ஆகவே, தமிழ்நாடு அரசு கடந்த 2006ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தின்படி தேனி மாவட்டம் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம மக்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டா வழங்குவதோடு, மலைக் கிராமங்களை விட்டு மக்களை வெளியேற்றும் முடிவைக் கைவிட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# “புதுச்சேரி சபாநாயகர் பதவியை பெற அமித் ஷாவிடம் வலியுறுத்துவோம்“

## பாஜக மேலிட பொறுப்பாளர்

புதுச்சேரி, ஆக.10–

புதுச்சேரியில் கடந்த முறை போல் பேரவைத் தலைவர் பதவியை பெற அமித் ஷாவிடம் வலியுறுத்துவோம் என பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா தெரிவித்தார்.

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் முடிவு கடந்த மே மாதம் 4ம் தேதி வெளியானது. தேர்தலில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைக்க மீண்டும் பெரும்பான்மை கிடைத்தது. ஆட்சியில் என்.ஆர்.காங்கிரஸ், பாஜக அங்கம் வகிக்கின்றன. முதல்வர், 3 அமைச்சர்கள் என்.ஆர்.காங்கிரஸை சேர்ந்தவர்கள். மீதமுள்ள இரு அமைச்சர்கள் பாஜகவை சேர்ந்தவர்கள்.

புதுவை அமைச்சரவையில் முதல்வர், 5 பேர் அமைச்சர்களாகப் பதவி வகிக்க முடியும். இந்த 6 பேரும் பதவியேற்ற நிலையிலும் யாருக்கும் இலாகா ஒதுக்கப்படவில்லை. அனைத்து துறைகளையும் முதல்வர் ரங்கசாமி மட்டுமே கவனித்து வந்தார்.



முதல்வர் ரங்கசாமி ஆளுநரிடம் அளித்த பட்டியலில் பாஜகவுக்கு கடந்த ஆட்சியில் தரப்பட்ட முக்கிய இலாகா தராததால் பிரச்சினை ஏற்பட்டது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வருகைக்கு முன்னதாக திருத்தப்பட்ட பட்டியலை முதல்வர், ஆளுநரிடம் தந்ததால் அமைச்சர்கள் இலாகா பட்டியல் அரசிதழில் கடந்த புதன்கிழமை வெளியானது. முதல்வர், அமைச்சர்கள் பொறுப்பேற்க தொடங்கி 85 நாட்களுக்கு பிறகு கடும் போராட்டம் நடத்தி பாஜக முக்கிய துறைகளை தனது அமைச்சர்களுக்கு பெற்றது.

அடுத்த இழுபறி தொடக்கம்:

தேர்தல் முடிவு வெளியாகி 90 நாட்கள் கடந்த நிலையில் புதுச்சேரி சட்டப்பேரவைக்கு சட்டப்பேரவைத் தலைவர், பேரவை துணைத்தலைவர் தேர்தல் நடத்தவில்லை. அதிமுக எம்எல்ஏ அன்பழகன் சட்டப்பேரவை தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டு எம்எல்ஏக்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

சபாநாயகர் பதவியை அன்பழகன் கோரி வருகிறார். பாஜகவும் இப்பதவியை கோருகிறது. இந்நிலையில் புதுச்சேரிக்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா வந்துள்ளார். தனியார் ஹோட்டலில் அவரை சந்திக்க வந்த புதுவை மாநில பாரதிய ஜனதா மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா கூறுகையில், "புதுவை வந்துள்ள மத்திய அமைச்சர் அமித்ஷா பாஜக எம்எல்ஏக்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் கட்சியின் வளர்ச்சி மற்றும் மாநில வளர்ச்சி பற்றி ஆலோசனை நடத்த உள்ளார்.

புதுச்சேரியில் தற்போது தற்காலிக சபாநாயகர் தான் உள்ளார். கடந்த முறை போல் கூட்டணியில் இப்போதும் பாஜகவுக்கு சபாநாயகர் பதவி வழங்க வேண்டும் என அமித்ஷாவிடம் வலியுறுத்த உள்ளோம்" என்றார்.

# “எப்சிஆர்ஏ மசோதாவை காங்கிரஸ் எதிர்க்கும்”: மல்லிகார்ஜுன கார்கே

டெல்லி, ஆக.10–

வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்ட திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சி எதிர்க்கும் என்றும், இந்த மசோதாவை தோற்கடிப்பது குறித்து எதிர்க்கட்சிகளுடன் நாளை (திங்கள்கிழமை) ஆலோசனை மேற்கொள்ளப்படும் என்றும் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிதி நடைமுறையை கடுமையாக்க வெளிநாட்டு நிதி திருத்த மசோதாவை மத்திய அரசு மக்களவையில் கடந்த மாதம் 25ம் தேதி அறிமுகம் செய்தது. இந்தியாவில் உள்ள தனி நபர்கள், சங்கங்கள், அரசு சாரா அமைப்புகள் ஆகியவை வெளிநாடுகளிடம் இருந்து நிதி பெறுவதையும், அவற்றைப் பயன்படுத்துவதையும் ஒழுங்குபடுத்தும் தற்போதைய வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்டம் 2010 ல் சில திருத்தங்களை அரசு முன்மொழிந்துள்ளது.



இந்த மசோதாவை காங்கிரஸ் எதிர்க்கும் என்று அக்கட்சியின் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார். உத்தராகண்ட்டின் ருத்ராபூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், “எப்சிஆர்ஏ தொடர்பான அரசின் நடவடிக்கையை நாங்கள் எதிர்க்க திட்டமிட்டுள்ளோம். இது தொடர்பான (நாடாளுமன்ற) வியூகத்தை திட்டமிடுவதற்காக நாளை எதிர்க்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி முடிவெடுப்போம்.

அயோத்தி ராமர் கோயில் நன்கொடை கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பான பிரச்சினையை நாடாளுமன்றத்தில் முதலில் எழுப்பியது காங்கிரஸ் கட்சிதான்.அயோத்தி ராமர் கோயில் அறங்காவலர் குழுவை நியமித்தது யார்? கோயிலை தொடங்கிவைத்தது யார்? ராமர் கோயிலில் கொடியை ஏற்றியது யார்? அறங்காவலர் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுத்தது யார்? எல்லாவற்றையும் முன்னின்று நடத்தியவர் பிரதமர் நரேந்திர மோடி. எனவே, இது குறித்து அவர் நாடாளுமன்றத்துக்கு வந்து பதிலளிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.” என தெரிவித்துள்ளார்.

# நிர்வாக வசதிக்காக த.வெ.க.,வில் மேலும் 27 மாவட்டங்கள் உருவாக்கம்!

சென்னை, ஆக.10–

தமிழக வெற்றிக் கழகத்தில் கட்சியின் நிர்வாகப் பணிகளை மேலும் தீவிரப்படுத்தும் நோக்கத்துடன் புதியதாக 27 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு அதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் கட்சியின் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அதிரடி மாற்றங்கள் தொண்டர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. புதிதாக உருவாக்கப்பட்டுள்ள இந்த மாவட்டங்களுக்குச் செயலாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகளை நியமிக்கும் பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று முடிந்துள்ளன.



தமிழகம் விஜய் தலைமைச் செயலகம் தலைமை அரசு தமிழ்நாடு

கட்சியின் வளர்ச்சிப் பணிகளைத் தடையின்றிச் செயல்படுத்தவும், பொதுமக்களின் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றவும் இந்த அமைப்பு ரீதியான மாற்றங்கள் அவசியமானதாகக் கருதப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பேற்க உள்ள புதிய நிர்வாகிகள் குறித்த விவரங்கள் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டு அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கையின் மூலம் கட்சியின் செயல்பாடு மேலும் துரிதமடைவதுடன், எதிர்காலச் செயல்பாடுகளுக்குத் தேவையான பலமான கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவரின் வழிகாட்டுதலின்படி மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த விஸ்தரிப்புப் பணிகள் மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளன. தொண்டர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து செயல்பட்டு கட்சியை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று தலைமை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய மாவட்டங்களின் மூலமாக மக்கள் தொடர்புப் பணிகள் பன்மடங்கு அதிகரித்து கட்சியின் செல்வாக்கு மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# மக்கள் விரோத சட்டங்களை அமல்படுத்த துடிக்கும் பா.ஜ.க.,

## திருப்பூர் எம்.பி.சுப்பராயன் குற்றச்சாட்டு

திருப்பூர், ஆக.10–

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனை இல்லாமல் மக்கள் விரோத சட்டங்களை மத்திய பாஜக அரசு அமல்படுத்த துடிப்பதாக திருப்பூர் எம்.பி சுப்பராயன் குற்றம்சாட்டினார்.

விலைவாசி உயர்வுக்கு முடிவு கட்ட வேண்டும், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். எல்லோருக்கும் கல்வியை உறுதி செய்ய வேண்டும், பெண்கள் இடஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை வழங்க வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை மத்திய, மாநில அரசுகளிடம் வலியுறுத்தும் விதமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நடைப்பயண



பரப்புரையை சென்னை சைதாப்பேட்டை பனகல் மாளிகை அருகே திருப்பூர் எம்.பி.சுப்பராயன் தொடங்கி வைத்தார். இதில் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் எம்.பி. சுப்பராயன் கூறியதாவது: தமிழக பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகள் வரும் என மக்கள் இலவுகாத்த கிளிபோல் காத்திருந்தனர். இறுதியில் ஏமாற்றமே மிஞ்சியது. முன்பு நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு புதிய லேபிள் ஒட்டப்பட்டுள்ளது.

தவெக தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்டவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. தேர்தல் அனுகூலத்துக்காக மட்டும் வாக்குறுதி கொடுப்பது தவறு என்பதை இந்த பட்ஜெட் அனுபவத்தில் அரசு உணர்ந்திருக்கும். அதேபோல், மத்திய அரசை பொறுத்தவரை ஆட்சிக்கு வந்தவுடன் இனி நல்ல காலம் பிறக்கும் என்றனர். தற்போது எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகள் இல்லாமல் மக்கள் விரோத சட்டத்தை அமல்படுத்த துடிக்கிறார்கள்.

அரசியல் சாசனத்தை அழிக்கும் அரசாக மத்திய பாஜக அரசு உள்ளது. மக்கள் நலன் சார்ந்த கோரிக்கைகளை முன்னிறுத்தி இந்தப் பயணத்தை தொடங்கி உள்ளோம். அடுத்த ஒரு வாரத்துக்கு நடைப்பயணம் மேற்கொள்ள இருக்கிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

# “எதற்காக எம்பிக்கள் கூட்டம்? அரசாங்கத்தை இயக்குவது யார்? கனிமொழி சரமாரி கேள்வி

சென்னை, ஆக.10–

எதற்காக எம்பிக்கள் கூட்டம் கூட்டப்பட்டது? தமிழ்நாடு அரசாங்கத்தை யார் இயக்கிக் கொண்டிருக்கிறார்? என்று திமுகவின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுகவின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் இன்று (ஆக.08) செய்தியாளர்களைச் சந்தித்த திமுகவின் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி, "தமிழ்நாடு அரசு அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தை நடத்தியுள்ளது. ஆனால், அதற்கான காரணம் சரியாகத் தெரியவில்லை.

கடந்த 2025 ஆம் ஆண்டு அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், தொகுதி மறுவரையறைக் குறித்து கருத்துகளைத் தெரிந்துக் கொள்வதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தியுள்ளார். அந்தக் கூட்டத்தில் தவெக



சார்பில் அந்த கட்சியின் பொதுச்செயலாளர் ஆனந்த் கலந்து கொண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்று கையெழுத்திட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது மற்ற கட்சிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறோம். அந்த தீர்மானத்திற்கும், இன்றைய தினம் நடைபெற்றக் கூட்டத்தில் எடுத்துள்ள முடிவிற்கும் என்ன வித்தியாசம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

தொகுதி மறுவரையறை மசோதா வந்தபோது முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மற்ற மாநிலங்களில் உள்ள கட்சித் தலைவர்களை அழைத்து சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். தொகுதி மறுவரையறையால் தமிழ்நாடு பாதிக்கப்படக் கூடாது என்பது தான் எங்களது தொடர் கோரிக்கை.

எங்களது தீர்மானத்தின் அடிப்படையில் கடந்த முறை மசோதா கொண்டு வந்தபோது எங்களால் இதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை மிகத் தெளிவாக எடுத்து கூறினோம்.

ஆனால், இதுவரை ஒன்றிய அரசாங்கம் எங்களையோ அல்லது எதிர்க்கட்சிகளையோ அழைத்து பேசியதாக தகவல்கள் இல்லை. இந்த மசோதாவில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது என்பது குறித்து எந்த விதமான தகவலும் இல்லை.

எதற்காக இந்த கூட்டம் கூட்டப்பட்டது? யார் இந்த கூட்டத்தின் பின்னணியில் இருக்கிறார்கள்? யார் இந்த அரசாங்கத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்கள்? என்று தெரியவில்லை. தலைமைச் செயலாளர் யாருக்காக வேலை செய்துக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு அரசுக்கா? தமிழக வெற்றிக் கழகத்திற்காக? எத்தனையோ பிரச்சனை இருக்கின்றது. மேகதாது பிரச்சனை மிக மோசமாக சென்றுக் கொண்டிருக்கக் கூடிய சூழலில் திசைத் திருப்பக் கூடிய ஒரு எண்ணத்தோடு இந்த கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறைக் கொண்டு வந்தால் நமக்கு மிகப்பெரிய பாதிப்பு இருக்கும். மக்கள்தொகை அடிப்படையில் அதை கணக்கீடு செய்யக்கூடாது. தமிழ்நாட்டுக்கு எந்த விதத்திலும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறைந்து விடக்கூடாது. நாம் மக்கள்தொகையைக் குறைத்துள்ளதற்காகப் பழி வாங்கப்படக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து.

யார் எட்டப்பர்கள் (காங்கிரஸ்) என்று தமிழ்நாடு மக்களுக்கு தெரியும். தேர்தலுக்கு பிறகு அவர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று அனைவருக்கும் தெரியும். புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தவெக, அனைத்து எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்துச் சென்று மத்திய நீர்வளத்துறை அமைச்சரைச் சந்தித்து மேகதாது பிரச்சனை குறித்து பேசுவது என்றால் அவர்களுடன் திமுக செல்வதற்கு தயாராக உள்ளது.

இன்றைய கூட்டம் குறித்து தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடு என்ன? தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரச்சனைகளை திசை திருப்பக் கூடிய எத்தனையோ விஷயங்கள் இன்று நடைபெற்றுள்ளது. புதிய மசோதாவில் என்ன இருக்கிறது? என்று யாருக்கும் தெரியாது. அது தெரிந்த பிறகுதான், அதை ஏற்றுக்கொள்ள போகிறோமா? எதிர்க்கிறோமோ? என்று முடிவு செய்ய முடியும்" எனத் தெரிவித்துள்ளார்.

# கல்லூரி மாணவர்கள் தங்கியுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் போலீசார் அதிரடி சோதனை

செங்கல்பட்டு, ஆக.10–

போதைப் பொருள் பயன்படுத்துவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், செங்கல்பட்டு அருகே கல்லூரி மாணவர்கள் தங்கியுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 100 க்கும் மேற்பட்ட போலீசார் அதிரடி சோதனையில் ஈடுபட்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் பொத்தேரி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இயங்கி வரும் தனியார் கல்லூரிகளில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், பிற மாநிலங்கள் மற்றும் வெ

இந்த நிலையில், இங்குள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளில் தங்கியிருக்கும் மாணவர்கள் சிலர் கஞ்சா மற்றும் உயர் ரக போதைப் பொருட்களை பயன்படுத்துவதாகவும், சட்ட விரோதமாக போதைப் பொருட்கள் வைத்திருப்பதாகவும் காவல் துறையினருக்கு அடுத்தடுத்து ரகசியப் புகார்கள் வந்தன.

அந்த புகார்களின் அடிப்படையில் 3 உதவி ஆணையர்கள் தலைமையிலான 100 க்கும் மேற்பட்ட போலீசார் சம்பந்தப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகளை சுற்றி வளைத்து,



(ஆகஸ்ட் 9) காலை முதல் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பாக, மாணவர்களின் அறைகள், குடியிருப்பு பகுதிகளில் உள்ள சந்தேகத்திற்குரிய இடங்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் வைக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்து தனிப்படை உதவியுடன் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால் அடுக்குமாடிக் குடியிருப்பை சுற்றி போலீசார் பலத்த கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமையான போலீசாரின் திடீர் சோதனையால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவி வருகிறது. தொடர்ந்து நடைபெற்று வரும் இந்த சோதனையின் முடிவிலேயே கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் விவரங்கள் மற்றும் பிடிபட்ட நபர்கள் குறித்த முழுமையான தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் போதைப் பொருள் பழக்கத்தை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் குற்றவாளிகள் மீது கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

போதைப் பொருள் ஒழிப்பு குறித்து தமிழ்நாட்டில் பல்வேறு வகையில் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடவடிக்கையாக தீவிர காவல் கண்காணிப்பு இருந்து வரும் நிலையில், கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் அடுக்குமாடிக் குடியிருப்பில் போலீசார் நடத்திய இந்த திடீர் சோதனையால் பரபரப்பு ஏற்பட்டது.



# சந்தேகத்திற்கு இடமான பரிந்துரை சீட்டுகளுக்கு மருந்துகளை வழங்க கூடாது போலீஸ் சூப்பிரண்டு அனிதா அறிவுறுத்தல்

கிருஷ்ணகிரி, ஆக.10- கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை சார்பில் மருந்துகடை உரிமையாளர்கள் மற்றும் மருந்தாளுனர்களுடனான ஒருங்கிணைப்பு ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்துக்கு மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அனிதா தலைமை தாங்கி பேசியதாவது :பதிவு செய்யப்பட்ட மருத்துவர்களின் செல்லுபடியாகும் பரிந்துரை சீட்டு இருந்தால் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகளை விற்பனை செய்ய வேண்டும். மருந்துகளை கொள்முதல், விற்பனை, இருப்பு, பதிவேடுகள் மற்றும் அதன்கீழ் உள்ள விதிமுறைகளின்படி முறையாக பராமரிக்க வேண்டும்.

போலியான அல்லது சந்தேகத்திற்கிடமான பரிந்துரை சீட்டுகளின் அடிப்படையில் மருந்துகளை வழங்கக் கூடாது. ஒரே நபர் தொடர்ந்து அதிகளவில் மருந்துகளை வாங்குவது, போலி பரிந்துரை சீட்டுகள் பயன்படுத்துவது அல்லது சந்தேகத்திற்கிடமான முறையில் மருந்துகள் வாங்கப்படுவது கண்டறியப்பட்டால் உடனடியாக போலீசாருக்கும், மருந்து கட்டுப்பாட்டு துறைக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும். மருந்து கடைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு, அவை முறையாக செயல்படுவதை உறுதி செய்து, பதிவுகளை பாதுகாப்பாக பராமரிக்க வேண்டும். மருந்தாளுனர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சந்தேகத்திற்கிடமான வாடிக்கையாளர்கள், போலி பரிந்துரை சீட்டுகள் மற்றும் சட்டவிரோத மருந்து பயன்பாட்டை கண்டறியும் வகையில், விழிப்புணர்வு மற்றும் பயிற்சி வழங்க வேண்டும்.காலாவதியான மருந்துகளை விதிமுறைகளின்படி மட்டுமே அழிக்க வேண்டும். அவை சட்டவிரோத பயன்பாட்டிற்கு செல்லாதவாறு பாதுகாக்க வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகள் திருட்டு, காணாமல் போதல் அல்லது சட்டவிரோதமாக மாற்றி விற்பனை செய்யப்படுவதாக சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக போலீசாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட மருந்துகடை உரிமையாளர்கள், சட்டவிரோத மருந்து விற்பனை மற்றும் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளில் காவல்துறைக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தனர். போதை பழக்கத்தை ஏற்படுத்தும் மருந்துகள் சட்டவிரோதமாக விற்பனை செய்வதையும், அவற்றின் தவறான பயன்பாட்டை தடுக்கும் நோக்கிலும் இக்கூட்டம் நடத்தப்பட்டது.

# குன்னூரில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அமைதிப் பேரணி: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

நீலகிரி, ஆக.10- நீலகிரி மாவட்டம் குன்னூரில், போர் நிறுத்தத்தை வலியுறுத்தி 'உலக அமைதிப் பேரணி' சிறப்பாக நடைபெற்றது.

பேரணி குன்னூர் சிம்ஸ் பூங்காவில் தொடங்கிய இந்தப் பேரணியை, குன்னூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஏ. ரவி மற்றும் வள்ளலார் அறக்கட்டளைத் தலைவர் எஸ். குப்புராஜ் ஆகியோர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.

பேரணியானது சிம்ஸ் பூங்காவிலிருந்து தொடங்கி விபி தெரு வரை நடைபெற்றது.

கோவை வள்ளலார் அறக்கட்டளையும், குன்னூர் பிரவிடென்ஸ் மகளிர் கல்லூரியும் நீலகிரி மக்கள் நற்பணி மய்யம் இணைந்து நடத்திய இப்பேரணியில், கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மகளிர் குழுக்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும், நீலகிரி மக்கள் நற்பணி மய்யம், கோத்தகிரி ஜுலேண்ட் அறக்கட்டளை, நீலகிரி மாவட்ட பெண்கள் இணைப்புக்குழு உள்ளிட்ட பொதுநல அமைப்புகள் பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்கிஜ பேரணியின் முடிவில் நடைபெற்ற நிகழ்வில், ஜுலேண்ட் அறக்கட்டளை நிர்வாகி அல்போன்ஸ் மாஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் போரினால் ஏற்படும் விளைவுகள், இயற்கை மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு. முத்துக்குமார் ஆற்றிய உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர் தனது உரையில், "வள்ளலாரின் அகிம்சை வழியில், போர்வெறியை அடக்கும் முதல் குரல் தமிழகத்திலிருந்து ஒலிப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது. தமிழன் என்றும் உலக அமைதிக்காகவும், மனிதநேயத்திற்காகவும் குரல்கொடுப்பவன்" என்று குறிப்பிட்டார்.

நீலகிரி மக்கள் நற்பணி மய்யத் தலைவர் கன்டோன்மென்ட் வினோத் குமார்உலக அமைதிக்காக மனித நேயத்தைப் பற்றியும் போர் நடப்பதால் ஏற்படும் மக்களின் வாழ்வாதாரம் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வை பற்றியும் பேசினார்.

நிகழ்ச்சியில் காவல் துணை ஆய்வாளர் பாஸ்கரன், கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் ரோஸ்டி லிமா, நீலகிரி நற்பணி மய்யத் தலைவர் வினோத்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் டாக்டர் ஷாஜிரஸ்கான் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

பேரணியில் வள்ளலார் அறக்கட்டளை அறங்காவலர் சிதம்பரம் கி. ராமசாமி, அமிர்தராஜ் ஜி அமைப்பின் நிறுவனர் அமிர்தராஜ், நீலகிரி நற்பணி மய்யத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன், கோவர்தனன், குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சஹானா வரவேற்புரை வழங்க, வள்ளலார் நிகழ்ச்சி ஏற்பட்டாளரும் அறக்கட்டளைச் செயலாளர் சுஜாதா நன்றிகூறினார்.



# உத்தமபாளையம் அருகே தாமரைகுளத்தில் விவசாயிகள் என்ற பெயரில் வண்டல் மண் கொள்ளை

உத்தமபாளையம், ஆக.10- தேனி மாவட்டம் உத்தமபாளையம் அருகே பொதுப்பணித் துறைக்கு சொந்தமான தாமரைக்குளம் கண்மாயில் உத்தமபாளையம் நீர் வளத்துறை பொறியாளர் ஒத்துழைப்போடு 50 க்கும் மேற்பட்ட ட்ராக்டர்கள் மூலம் வண்டல் மண் எடுக்கப்பட்டு வணிகத்திற்காக கொண்டு செல்லப்பட்டு இலவசமாக மண் எடுக்கப்பட்டு விலைக்கு விற்கப்படுகின்றனஇந்த வண்டல் மண் கொள்ளையை மாவட்ட ஆட்சியர் உடமையாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி சமூக ஆர்வலர்கள் மாவட்ட ஆட்சியருக்கு புகார் தெரிவித்துள்ளனர். எனவே சம்மந்தபட்ட பொறியாளர் உரிய முறையில் அனுமதி வழங்கிட வேண்டும். என்பது அப்பகுதி சமூக ஆர்வலர்கள் தெரிந்துள்ளனர்.

# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்



தேனி, ஆக.10- தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



# கன்னியாகுமரி மாவட்டம் கோணம் பகுதியில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் ஆய்வு

கன்னியாகுமரி, ஆக.10- கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோணம் பகுதியில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், தலைமையில் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

தமிழ்நாடு அரசு, மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்தவும், போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக் கனவுகளை நனவாக்கவும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவிகள் எளிதில் வந்து பயன்பெறும் வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் அறிவுசார் மையங்கள் மற்றும் முதல்வர் படிப்பகங்கள் தொடங்கப்பட்டு திறம்படச் செயல்பட்டு வருகின்றன.

அதன்ஒருபகுதியாக, நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோணம் பகுதியில் செயல்பட்டு வரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு நாள்தோறும் வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கை, நாளிதழ்கள், போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களின் இருப்பு ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவமாணவிகளுக்குத் தேவையான அனைத்து பாடப் புத்தகங்கள், மத்தியமாநில அரசுப் பணிகளுக்கான நுழைவுத் தேர்வு வழிகாட்டி நூல்கள் மற்றும் துறை சார்ந்த புதிய புத்தகங்களை கூடுதல் எண்ணிக்கையில் தடையின்றி கிடைக்கப் பெற நடவடிக்கை எடுக்க அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் சுத்தமான குடிநீர் வசதி, மின்சார வசதி, காற்றோட்டமான சூழல் மற்றும் தூய்மையான கழிப்பறை வசதிகள் சீராகப் உள்ளதான மாணவ மாணவியர்களிடம் கேட்டறியப்பட்டது. இப்பகுதியில் உள்ள இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் படிப்பகத்தினை முழுமையாகப் பயன்படுத்தி தங்களது வாழ்வியல் வாழ்வா தாரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ்குமார் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஜஸ்வர்யா, மாதவன், துறை மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் பொதுமக்களுக்கு இலவச மருத்துவ முகாம்

மாதவரம், ஆக.10- மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் சிஜசி மெடிக்கல்ஸ் மற்றும் புழல் மனிதநேய லயன்ஸ் சங்கம், அப்போலோ மருத்துவமனை, சங்கரா நேத்ராலயா கண் மருத்துவமனை இணைந்து இலவச இதயம் மற்றும் பொது மருத்துவம், கண் அறுவை சிகிச்சை பரிசோதனை முகாம் சிஜசி மெடிக்கல்ஸ் உரிமையாளர் சாது சிஜசி ரேவதி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.புழல் மனித நேய லயன்ஸ் சங்க மாவட்டத் தலைவர் பாலாஜி, சங்கத் தலைவர் ஹேமாத்ரி, செயலாளர் முரளி, பொருளாளர் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக சிஜசி மெடிக்கல்ஸ் உரிமையாளர்கள் ஸ்ரீநாத், ஸ்ரீகாந்த், பிரபா, சரண் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக முன்னாள் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி மன்ற தலைவர்கள் கவிதா டேவிட்சன், அந்தோணி, ஆங்காடு முன்னாள் தலைவர் காமராஜ், திமுக ஒன்றியச் செயலாளர் அண்ணாதுரை, 1வது வார்டு முன்னாள் உறுப்பினர் வேளாங்கண்ணி சரவணன், சமூக சேவகர் செங்குட் டுவன், வாத்தியார் முனுசாமி, மலையப்பன், தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சி செயலர் உல்லாசம், சதீஷ் ஆகியோர் கலந்து கொண்டு இலவச மருத்துவ முகாமை துவக்கி வைத்து இலவச மருந்து மாத்திரைகளை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து முதுநிலை ஆசிரியர் வி.பி. தேவராஜுலு சிஜசி மருந்தககத்தை திறந்து வைத்தார். இமுகாமில் உயரம், எடை, இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு, ஈசிஜி, எ்கோ, கண் பரிசோதனை உள்ளிட்டவைகள் இலவசமாக பரிசோதிக்கப்பட்டு மருந்துவர்கள் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. 120க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியம், நாய்க்கனேரி ஊராட்சி, நடுவூர் பகுதியில் செயல்பட்டு வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மாணவ, மாணவியர்களுக்கு அளிக்கப்படும் கற்றல் திறன் குறித்து மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட இயக்குநர் சௌ.தமிழரசி, பள்ளி ஆசிரியர்கள் உடனிருந்தனர்.

# பந்தலூர் முழுநேர கிளை நூலகத்தில் பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழாவும், போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டு கருத்தரங்கமும் நடைபெற்றது



நீலகிரி, ஆக.10- பந்தலூர் முழுநேர கிளை நூலகத்தில் பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழாவும், போட்டித் தேர்வுகளுக்கான வழிகாட்டு கருத்தரங்கமும் நடைபெற்றது.

மகாத்மா காந்தி பொது சேவை மையம், பந்தலூர் முழுநேர கிளை நூலகம், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் மற்றும் ஆல் தி சில்ரன் ஆகியவை இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு மாவட்ட நூலக அலுவலர் லூ. கிளமண்ட் தலைமை வகித்தார். பந்தலூர் முழுநேர கிளை நூலகர் வெ. அறிவழகன் வரவேற்றார்.

பந்தலூர் வாசகர் வட்டத் தலைவர் பெ. முத்துக்குமார், கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மைய பொதுச்செயலாளர் சு. சிவசுப்பிரமணியம், மகாத்மா காந்தி பொது சேவை மையத் தலைவர் அ. நௌசாத், ஆல் தி சில்ரன் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ப. அஜித், கொளப்பள்ளி நூலகர் முத்துசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட இந்திய வனப்பணித் தேர்வில் வெற்றி பெற்ற இ. அருண் வடிவரசன் (IFS) பேசுகையில், மாணவர்கள் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்புடன் தங்களது எதிர்கால இலக்கை தெளிவாக நிர்ணயிக்க வேண்டும். போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற திறமையுடன் தொடர்ச்சியான முயற்சி, நேர மேலாண்மை, தினசரி வாசிப்பு மற்றும் திட்டமிட்ட பயிற்சி அவசியம். மேலும், செய்தித்தாள் மற்றும் புத்தக வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொண்டு பொது அறிவு, நடப்பு நிகழ்வுகள் மற்றும் பாட அறிவை தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் 18வது இடம் பெற்ற ஸ்ருதி IAS பேசுகையில், மாணவர்கள் தற்போதைய சூழ்நிலைகள் அல்லது வசதிகளை மட்டுமே கருத்தில் கொண்டு எதிர்காலத்தை தீர்மானிக்கக் கூடாது. உயர்ந்த இலக்கை நிர்ணயித்து, அதை அடைவதற்கான சிறு இலக்குகளை தினசரி திட்டமிட்டு செயல்படுத்த வேண்டும் என்றும், முதல் முயற்சியிலேயே வெற்றி கிடைக்காவிட்டாலும் மனம் தளராமல் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலைப் பயன்படுத்தி தங்களுக்கேற்ற கல்வி மற்றும் தொழில் பாதையை மாணவர்கள் தேர்வு செய்ய வேண்டும் என்று கூறினார்.

தொடர்ந்து, பந்தலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2 பொதுத் தேர்வில் முதலிடம் பெற்ற யமுனா, இரண்டாமிடம் பெற்ற தனுசிகா, மூன்றாமிடம் பெற்ற சுபாஷிணி ஆகியோருக்கும், 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் முதலிடம் பெற்ற பாத்திமா பிதா, இரண் டாமிடம் பெற்ற லியானா தெஸ்னி, மூன்றாமிடம் பெற்ற யுவராஜ் ஆகியோருக்கும் பரிசுகளும் பணமுடிப்புகளும் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாணவர்கள், பெற்றோர், வாசகர்கள் பலர் கலந்து கொண்டனர். நிறைவில் பந்தலூர் முழுநேர கிளை நூலகர் நித்தியகல்யாணி நன்றி கூறினார்.

# ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கும் சட்டப்படி 8.33% போனஸ்: சென்னை தொழில் தகராறு தீர்ப்பாயம் உத்தரவு




சென்னை, ஆக.10-

ஆம்புலன்ஸ் பணியாளர்களுக்கும் சட்டப்படி 8.33 சதவீதம் போனஸ் வழங்க வேண்டுமென்றும், பணி நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க வேண்டுமென்றும் சேவை நிறுவனத்துக்கு சென்னை தொழில் தகராறு தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

நாடு முழுவதும் 108 ஆம்புலன்ஸ் திட்டம் கடந்த 2005ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழகத்திலும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஆம்புலன்ஸ் வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் ஆம்புலன்ஸ் பணியாளர்களின் பணி நேரத்தை 12 மணி நேரத்தில் இருந்து 8 மணி நேரமாக குறைப்பது, 2021- 22 மற்றும் 2022-23 காலகட்டங்களுக்கு 30 சதவீத ஊதிய உயர்வு வழங்குவது, தீபாவளி போனஸ் வழங்குவது தொடர்பான வழக்கு விசாரணை சென்னை தொழில் தகராறு தீர்ப்பாயத்தில் நடந்து வந்தது.

அதன்படி இந்த வழக்கை விசாரித்த தொழில் தகராறு தீர்ப்பாயம் பிறப்பித்துள்ள உத்தரவில், “கடந்த 2021-22ம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு தொடர்பாக நடத்தப்பட்ட முத்தரப்பு பேச்சுவார்த்தையில் 16 சதவீத ஊதிய உயர்வுக்கு தொழிற்சங்கங்கள் சார்பில் ஒப்புதல் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் 30 சதவீத ஊதிய உயர்வு வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்க முடியாது. அதே சமயம், 2022 -23ம் ஆண்டுக்கு விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல்வேறு காரணிகளைக் கணக்கில் கொண்டு 25 சதவீத ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

தீபாவளி போனஸைப் பணியாளர்களுக்கு விழாக்கால செலவாக வழங்கப்பட்ட ரூ.4 ஆயிரத்து 400ஐ போனஸாக கருத முடியாது. அவர்களுக்கு சட்டப்படி 8.33 சதவீத போனஸ் வழங்கப்பட வேண்டும். இந்த ஊதிய உயர்வு மற்றும் போனஸ் பாக்கியை ஆம்புலன்ஸ் சேவை வழங்கி வரும் தனியார் நிறுவனம் 2 மாதங்களில் வழங்க வேண்டும். அதேபோல ஆம்புலன்ஸ் பணியாளர்களின் 12 மணி நேர பணி நேரத்தை 8 மணி நேரமாக குறைக்க வேண்டும்“ என உத்தரவிட்டுள்ளது.

# குன்னூரில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அமைதிப் பேரணி: 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு




நீலகிரி, ஆக.10-

நீலகிரி மாவட்டம் குன்னூரில், போர் நிறுத்தத்தை வலியுறுத்தி ‘உலக அமைதிப் பேரணி’ சிறப்பாக நடைபெற்றது.

பேரணி குன்னூர் சிம்ஸ் பூங்காவில் தொடங்கிய இந்தப் பேரணியை, குன்னூர் காவல் துணை கண்காணிப்பாளர் ஏ. ரவி மற்றும் வள்ளலார் அறக்கட்டளைத் தலைவர் எஸ். குப்புராஜ் ஆகியோர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தனர்.

பேரணியானது சிம்ஸ் பூங்காவிலிருந்து தொடங்கி வி பி தெரு வரை நடைபெற்றது.

கோவை வள்ளலார் அறக்கட்டளையும், குன்னூர் பிரவிடென்ஸ் மகளிர் கல்லூரியும் நீலகிரி மக்கள் நற்பணி மய்யம் இணைந்து நடத்திய இப்பேரணியில், கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள் மற்றும்

500க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் மகளிர் குழுக்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேலும், நீலகிரி மக்கள் நற்பணி மய்யம், கோத்தகிரி ஜூலேண்ட் அறக்கட்டளை, நீலகிரி மாவட்ட பெண்கள் இணைப்புக்குழு உள்ளிட்ட பொதுநல அமைப்புகள் பேரணிக்கு ஒத்துழைப்பு வழங்கிஜ பேரணியின் முடிவில் நடைபெற்ற நிகழ்வில், ஜூலேண்ட் அறக்கட்டளை நிர்வாகி அல்போன்ஸ் மாஜ் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் போரினால் ஏற்படும் விளைவுகள், இயற்கை மற்றும் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்துப் பேசினார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் கு. முத்துக்குமார் ஆற்றிய உரை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அவர் தனது உரையில், “வள்ளலாரின் அகிம்சை வழியில், போர்வெறியை அடக்கும் முதல் குரல் தமிழகத்திலிருந்து ஒலிப்பது வரலாற்றுச் சிறப்புமிக்கது. தமிழன் என்றும் உலக அமைதிக்காகவும், மனிதநேயத்திற்காகவும் குரல்கொடுப்பவன்” என்று குறிப்பிட்டார்.

நீலகிரி மக்கள் நற்பணி மய்யத் தலைவர் கன்டோன்மென்ட் வினோத் குமார்உலக அமைதிக்காக மனித நேயத்தைப் பற்றியும் போர் நடப்பதால் ஏற்படும் மக்களின் வாழ்வாதாரம் அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி உயர்வை பற்றியும் பேசினார்.

நிகழ்ச்சியில் காவல் துணை ஆய்வாளர் பாஸ்கரன், கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் ரோஸ்டி லிமா, நீலகிரி நற்பணி மய்யத் தலைவர் வினோத்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் டாக்டர் ஷாஜிரஸ்கான் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

பேரணியில் வள்ளலார் அறக்கட்டளை அறங்காவலர் சிதம்பரம் கி. ராமசாமி, அமிர்தராஜ் ஜி அமைப்பின் நிறுவனர் அமிர்தராஜ், நீலகிரி நற்பணி மய்யத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணன், கோவர்தனன், குமார் உள்ளிட்டோர் கலந்து

கொண்டனர். சஹானா வரவேற்புரை வழங்க, வள்ளலார் நிகழ்ச்சி ஏற்பட்டாளரும் அறக்கட்டளைச் செயலாளர் சுஜாதா நன்றிகூறினார்.

# “மேகமலை, வருசநாடு வன கிராம மக்களை வெளியேற்றும் முடிவை கைவிட வேண்டும்” -சீமான்

சென்னை, ஆக.10-

‘தேனி மாவட்டம் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும்’ என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டத்துக்குட்பட்ட தும்மக்குண்டு, மேகமலை உள்ளிட்ட 98 மலை கிராமங் களில் பல தலைமுறைகளாக வசித்து வரும் 5,000க்கும் அதிகமான மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து வெளியேற்ற முயல்வது மிகுந்த வேதனை அளிக்கிறது.

கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ்ப் பழங்குடி மக்கள் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம பகுதியில் உள்ள நிலங்களில் இலவம், முந்திரி, மிளகு, ஏலம் உள்ளிட்ட பயிர்களை விளைவித்து வருகின்றனர்.

வன உயிரினங்கள் பெருமளவு அழிந்துவிட்ட தற்காலச் சூழலில் இயற்கை சமநிலையைப் பேணுவதில், மனிதர்களால் வளர்க்கப்படும் கால் நடைகள் பெருமளவு பங்கு வகிக்கிறது என்பதே எதார்த்த உண்மையாகும்.

மலைவாழ் மற்றும் பழங்குடியின மக்கள் காலங்காலமாக மலைகளுக்கும், காடுகளுக்கும் அவற்றில் வாழும் உயிரினங்களுக்கும் பாதுகாவலனாய் வாழ்ந்து வருகின்றனர். பன்மடங்கு அறிவியல் வளர்ச்சி ஏற்பட்டுள்ள நவீன உலகத்தின் அத்தனை வசதி வாய்ப்புகளையும் புறக்கணித்துவிட்டு, இன்றளவும் இயற்கையோடு இயற்கையாக வாழ்கின்ற அப்பெருங்குடி மக்கள் போற்றுதலுக்குரியவர்கள்.

அவர்களின் வாழ்வாதாரம் முழுக்க முழுக்கக் காடுகளையும், மலைகளையும் சார்ந்தே இருப்பினும், இத்தனை ஆயிரம் ஆண்டுகளில் அவர்களின் செயல்பாடுகள் ஒருபோதும் இயற்கையை அழிப்ப தாகவோ, சிதைப்ப தாகவோ இருந்ததில்லை.

அந்த அளவுக்கு இயற்கையோடு இயைந்த வாழ்வியலை மலைவாழ் மக்கள் மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அம்மக்களை வெளியேற்ற வழிவகுக்கும் தீர்ப்பானது இயற்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமே தவிர எவ்வகையிலும் பாதுகாப்பதாய் அமையாது.

உண்மையில் அரசு மற்றும் தனியார் பெருமுதலாளிகள் வணிக நோக்குடன் அமைக்கும் தொழிற்சாலைகள், தொலைத்தொடர்பு கம்பிவடம் பதித்தல், மின் மற்றும் தொலைத்தொடர்பு கோபுரங்கள், ஆய்வுக் கூடங்கள் உள்ளிட்டவற்றால் மட்டுமே மலைகளும், காடுகளும், நீர்நிலைகளும் அவற்றை நம்பி வாழும் வன உயிரினங்களும் பேரழிவைச் சந்தித்து வருகின்றன. அவற்றையெல்லாம் அனுமதித்துவிட்டு, பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்துவரும் பழங்குடியின மக்களையும், மலைவாழ் மக்களையும் அவர்களின் வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்துவது, தனியார் முதலாளிகள் அந்நிலங்களை ஆக்கிரமித்து இயற்கையை மென்மேலும் சீரழிக்கவே வழிவகுக்கும்.

அதுமட்டுமின்றி, மலைக்காடுகளையும், வன உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டுமென்ற உண்மையான அக்கறை இருக்குமாயின், ஒவ்வொரு நாளும் காடுகளில் முறைகேடாக மரங்கள் வெட்டப்பட்டு டன் கணக்கில் கடத்தப்படுவதையும், சொகுசு விடுதிகள், அடுக்குமாடி கட்டிடங் கள், தண்டவா ளங்கள், சாலைகள், தொழிற்சாலைகள், தொலைத்தொடர்பு கருவிகள், அறிவியல் ஆய்வகங்கள் ஆகியவை அமைப்பதற்காக, வன விலங்குகளின் வாழ்விடங்களும், வழித்தடங்களும் சுருக்கப்படுவதையும் தடுத்து நிறுத்த தீவிர நடவடிக்கை எடுப்பதே சரியானதாக இருக்கும்.

ஆகவே, தமிழ்நாடு அரசு கடந்த 2006ஆம் ஆண்டு வன உரிமைச் சட்டத்தின்படி தேனி மாவட்டம் மேகமலை, வருசநாடு பகுதி வன கிராம மக்களுக்கு உடனடியாக வீட்டுமனை பட்டா வழங்குவதோடு, மலைக் கிராமங்களை விட்டு மக்களை வெளியேற்றும் முடிவைக் கைவிட வேண்டுமென வலியுறுத்துகிறேன்.’ எனத் தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் தேசிய குடற்புழு நீக்க முகாம் இன்று தொடக்கம்



கிருஷ்ணகிரி, ஆக.10-

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று ஆக.10 மற்றும் ஆக.17 ஆகிய தேதிகளில் தேசிய குடற்புழு நீக்க முகாம் நடைபெறுகிறது.

1-19 வயது குழந்தைகள் 5,32,947 பேருக்கும், 20-30 வயது பெண்கள் 1,50,255 பேருக்கும் அல்பெண்டாசோல் மாத்திரைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

அங்கன்வாடி, பள்ளி, கல்லூரி, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் முகாம் நடைபெறுகிறது.

குழந்தைகள் மற்றும் பெண்கள் அனைவரும் முகாமில் பங்கேற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் ச.தினேஷ் குமார், கேட்டுக்கொண்டுள்ளார்.

# கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் கலர், கலராக கற்றாழை தாவரம்: சுற்றுலா பயணிகள் கண்டு ரசிப்பு

கொடைக்கானல், ஆக.10-

கொடைக்கானலில் உள்ள பிரையண்ட் பூங்காவில் பல்வேறு வண்ணங்களில் பல வகையான மலர்கள் பூத்து குலுங்கின்றன. இந்நிலையில், பிரையண்ட் பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் ‘ஜிம்னோகாலிசியம் மிஹானோவிச்சி’ என தாவரவியல் பெயரில் அழைக்கப்படும் கற்றாழை தாவரத்தை தொட்டியில் வைத்து வளர்த்து வருகின்றனர். இந்த தாவரம் தென் அமெரிக்காவை பூர்வீகமாக கொண்டது. பச்சை நிறம் இல்லாத இந்த கற்றாழை தனியாக வளராது.

எனவே, இதனை மற்றொரு சாதாரண கற்றாழை தண்டின் ஒட்டுச்செடியாக வளர்க்க வேண்டும். இதன்படி, கற்றாழை செடியின் தண்டு பகுதி பச்சை நிறத்திலும், மேற்பகுதி மஞ்சள், சிவப்பு, இளஞ்சிவப்பு, ஆரஞ்சு உள்ளிட்ட நிறங்களில் ‘மூன் காக்டஸ்’ பூக்கள் பூப்பது போல் கற்றாழை வளர்த்துள்ளது. இதனை பூங்கா நிர்வாகத்தினர் பராமரித்து வருகின்றனர். கண்ணாடி மாளிகைக்கு வரும் சுற்றுலா பயணிகள் வண்ண, வண்ண நிறத்தில் இருக்கும் கற்றாழை தாவரத்தை ஆர்வத்துடன் பார்த்து புகைப்படம் எடுத்து மகிழ்கின்றனர்.

# தமிழகத்தில் 15ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு: வானிலை ஆய்வு மையம்




சென்னை, ஆக.10-

தமிழகத்தில் நாளை முதல் 15ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் வெப்பம் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: வட தமிழக கடலோர பகுதிகளின் மேல் சுமார் 5.8 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளையும் (ஆக.10), நாளை மறுதினமும் தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஆகஸ்டு 12, 13 தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், வட கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் மிதமான மழையும், இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 14ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும், 15ம் தேதி லேசான மழையும் பெய்யக்கூடும்.

இன்று முதல் 13ம் தேதி வரை வட தமிழகத்தின் உள் மாவட்டங்களில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாகவும், இதர தமிழகத்தில் வழக்கமான அளவிலும் இருக்கும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான அல்லது மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக சென்னை பள்ளிக்கரணை, கோவை மாவட்டம் சின்கோனா, உபாசியில் தலா 6 செமீ, சென்னை மாவட்டம் அம்பத்தூர், மேடவாக்கம், கோவை மாவட்டம் சின்னக்கல்லார், வால்பாறையில் தலா 5 செமீ, ராணிப்பேட்டை மாவட்டம் கலவை, அம்மூர், வாலாஜாபேட்டை, சென்னை ராஜா அண்ணாமலை புரம், அடையார், கோவை மாவட்டம் சோலையார், வேலூர் மாவட்டம் காட்பாடி, ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தட்கல் திட்டத்தில் விண்ணப்பித்த 60 ஆயிரம் விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும்: அன்புமணி வலியுறுத்தல்

சென்னை, ஆக.10-

பாமக தலைவர் அன்புமணி வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாட்டில் நிலத்தடி நீரைக் கொண்டு பாசனம் செய்வதற்காக இலவச மின்சார இணைப்புக் கோரி தட்கல் திட்டத்தின்படி விண்ணப்பித்த 47 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்காமல் மின்வாரியம் தாமதப்படுத்தி வருகிறது. வேளாண் இலவச மின்சாரத்திற்கான இணைப்புக்காக 60,120 உழவர்களிடமிருந்து ரூ.1500 கோடியை வசூலித்திருக்கும் மின்சார வாரியம் மின் இணைப்பை வழங்க மறுப்பது பெரும் அநீதி.

தட்கல் திட்டத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு 15 நாள்களிலிருந்து 90 நாள்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்பது விதியாகும். ரூ.1000 மின் கட்டணம் செலுத்தத் தவறும் விவசாயிகளின் மின் இணைப்பை உடனடியாக துண்டிக்கும் மின்சார வாரியம், மின்சார இணைப்பு வழங்க மறுப்பது உழவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகம். இதை நியாயப்படுத்த முடியாது.

விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்காதது, வறட்சியால் குறுவை சாகுபடி செய்ய முடியாதது, பயிர்க்கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படாதது உள்ளிட்ட காரணங்களால் உழவர்கள் ஏற்கனவே பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்றனர். எனவே, தட்கல் திட்டப்படி விண்ணப்பித்து காத்திருக்கும் 60,120 உழவர்களுக்கும் உடனடியாக வேளாண் இலவச மின் இணைப்பை வழங்க வேண்டும்.

# கிருஷ்ணகிரி தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 1,112 பேருக்கு பணிநியமன ஆணை



கிருஷ்ணகிரி, ஆக.10-

கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலைக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமை நடத்தின. இளையராஜா எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். இம்முகாமுக்கு கலெக்டர் தினேஷ்குமார் தலைமை தாங்கி, தனியார் நிறுவனங்களில் தேர்வு செய்யப்பட்ட 1,112 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி பேசியதாவது:வேலைக்கு செல்வோர் கிடைத்த வேலையை ஒரு பயிற்சி தளமாக எடுத்துக்கொண்டு தங்களின் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும் அரசு வேலைக்காக காத்திராமல் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார்துறை நிறுவனங்களில் உள்ள பணியிட ங்களை பெற்றிடும் நோக்குடன் இலவசமாக தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடத்தப்படுகிறது. அரையாண்டிற்கு ஒருமுறை பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும், மாதத்தின் 3வது வெள்ளிக்கிழமைகளில் அலுவலக வளாகத்திலேயே, சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்களும் இலவசமாக நடத்தப்படுகிறது.மேலும் தமிழ்நாடு தனியார்துறை வேலை இணையத்தின் ( www.tnprivatejobs.tn.gov.in ) முக்கிய நோக்கமானது தனியார் துறையில் வேலையளிப்போருக்கான மனிதவள தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளவும், தமிழ்நாட்டை சார்ந்த வேலைநாடுநர்களுக்கு அவர்களின் எதிர்ப்பார்ப்பிற்கு ஏற்ப தனியார் துறையில் வேலை பெற வழிவகை செய்யவும் இணைப்பு பாலமாக திகழ்வதே ஆகும்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இவ்விணையளத்தில் சிறிய மற்றும் பெரிய அளவிலான 375 தனியார் துறை நிறுவனங்கள் பதிவு செய்து அவர்களின் தேவைக்கு ஏற்ப வேலை நாடுநர்களை தேர்வு செய்கின்றனர். நேற்று நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் முன்னணி நிறுவனங்கள் உள்பட 130 தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்று தேவையான ஆட்களை தேர்வு செய்தனர். அதன்படி 2968 பேரில் 1,112 நபர்களுக்கு தனியார் நிறுவனங்கள் சார்பில் பணி நியமன ஆணைகள் வழங்கப் பட்டன. எனவே பணிநியமன ஆணை பெற்றவர்கள் தங்கள் தொழில் திறனை மேம்படுத்தி சிறப்பாக பணியாற்ற வேண்டும்,இவ்வாறு அவர் கூறினார்.தொடர்ந்து காளான் வளர்ப்பு, தையல் மற்றும் தூரித உணவு தயாரிப்பு என பயிற்சி பெற்ற 99 நபர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் மகளிர் மேம்பாட்டு திட்ட அலுவலர் சுசீலா ராணி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கவுரிசங்கர், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் வெங்கடேசன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் முருகேசன், முன்னோடி வங்கி மேலாளர் சசிகுமார், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் கீதா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161